## சர்க்காரியா கமிஷன் பற்றி நேருக்கு நேர் விவாதிக்க விஜய் தயாரா?

# த.வெ.க. ஆட்சிமீது தி.மு.க. வைத்த குற்றச்சாட்டுகளை எல்லாம் திசைதிருப்பும் முயற்சி!

# கபட நாடகத்தை அரங்கேற்றிவிட்டு ஓடியிருக்கிறார் விஜய்!

## முதல்வர் விஜய்யின் சட்டமன்ற பேச்சு தொடர்பாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டி!



**சென்னை, செப். 9–**

**சர்க்காரியா கமிஷன் பற்றி நேருக்கு நேர் விவாதிக்க விஜய் தயாரா.? என்றும் த.வெ.க. ஆட்சி மீது தி.மு.க. வைத்த குற்றச்சாட்டுகளை எல்லாம் திசைதிருப்பும் முயற்சி கபட நாடகத்தை அரங்கேற்றிவிட்டு ஓடியிருக்கிறார் விஜய் என்றும் முதல்வர் விஜயின் சட்டமன்ற பேச்சு தொடர்பாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அளித்த பேட்டி வருமாறு:

இன்றைய முதலமைச்சர் இந்த ஆட்சி மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல எதுவுமில்லாத காரணத்தால் அவர் பிறப்பதற்கு முன்பு சொல்லபட்ட குற்றச்சாட்டை எடுத்து வந்து இப்போது பேசி உள்ளார். எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த 116 நாள் ஆட்சியில் நடைபெற்றுள்ள கொலைகள், பாலியல் வன்கொடுமைகள், கொள்ளைகள், சட்டம் ஒழுங்கு சீரழிவு பற்றி ஆதாரங்களோடு நேருக்கு நேராக குற்றம் சாட்டி கேள்வி எழுப்பினார். மற்ற எதிர்க்கட்சி தலைவர்களும் அடுக்கடுக்காடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அவை எதற்கும் பதில் அளிக்க யோக்கியதை இல்லாமல், தைரியமில்லாமல், செத்த பாம்பை அடிப்பது போல முடிந்து போன சர்க்காரியா கமிஷன் பற்றி பேசி உள்ளார். சர்க்காரியா கமிஷன் பற்றி இவருக்கு தெரியுமா?

சர்க்காரியா கமிஷன் தொடர்பான உண்மைகளை தற்போதைய சூழ்நிலையில் மக்களுடன் பகிர்வது என்னைப்போன்றவர்களின் கடமையாகும். அவர் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் எதற்கும் எந்தவொரு அடிப்படை ஆதாரமும் இல்லை. அதற்கு சில உதாரணங்களைத் தருகிறேன். உதாரணமாக, அண்ணா சாலையில் அண்ணா தியேட்டர் இருக்கிறது. இந்த அண்ணா தியேட்டர் கலைஞருக்குச் சொந்தமானது என்று கூறி சர்க்காரியா கமிஷனிடம் ஒரு புகார் அளிக்கப்பட்டது. இது உண்மையில் யாருக்குச் சொந்தமானது என்பதற்கான தகவல்கள் விஜய்யின் கைகளில் உள்ளன. சர்க்காரியா கமிஷனைப் பற்றிப் பேசும் விஜய்க்கு தெம்பும் திராணியும் இருந்தால், அண்ணா தியேட்டர் உண்மையில் யாருக்குச் சொந்தமானது என்பதை அவர் கூறட்டும். இது ஜக்கரியா சேட் என்பவருக்குச் சொந்தமானது. ஆனால் அது கலைஞருக்கு சொந்தமானது என்று அந்தப் புகாரில் எழுதப்பட்டிருந்தது. இது முதலாவது; இரண்டாவது, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் இன்று அந்த ஹோட்டல் இல்லை. அப்பொது ஓசியானிக் ஹோட்டல் போன்ற இரண்டோ அல்லது மூன்றோ மட்டுமே இருந்தன. சாந்தோம் கடற்கரையில், கடற்கரை ஓரத்தில் ஓசியானிக் ஹோட்டல் என்று ஒரு ஹோட்டல் இருந்தது. இது திரைப்பட நடிகர்களும் மற்ற வசதி படைத்தவர்களும் தங்கியிருந்த ஒரு ஹோட்டலாகும். அதேபோல், பூவிருந்தவல்லி சாலையை எடுத்துக் கொண்டால், அருண் ஹோட்டல் என்று ஒரு ஹோட்டல் இருந்தது. எல்லாவற்றையும் கிழித்தெறிந்து கீழே தள்ளுவேன் என்று சர்க்காரியா கமிஷனிடம் புகார் அளிக்கும் விஜய், அருண் ஹோட்டல் கலைஞருக்குச் சொந்தமானது என்று எழுதினார். ஆனால் அந்த அருண் ஹோட்டல் யாருக்குச் சொந்தமானது? விஜய்க்கு இன்று தெம்பு, திராணி, தைரியம் இருந்தால், அவர் இந்த சொத்து யாருக்குச் சொந்தமானது என்பதைக் கண்டுபிடித்து வெளிப்படுத்த வேண்டும்.

அதைவிட மிகவும் நகைப்புக்குரிய விஷயம். திருவாரூரில் கலைஞர் 10 அல்லது 15 ஏக்கர் நிலம் தான் அப்போது வைத்திருந்தார் அந்த நிலம் இப்போது அவரது குடும்ப உறுப்பினர்களால் ஒரு நினைவிடமாகப் பெரிதும் மேம்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் அதற்கு லண்டனிலிருந்து ஒரு டிராக்டர் அவருக்கு லஞ்சமாக வழங்கப்பட்டதாகவும், அதை அவர் திருவாரூரில் உள்ள தனது சொந்த நிலத்தை உழவு செய்யப் பயன்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. குறிப்பிடப்பட்ட அந்த டிராக்டரைப் பயன்படுத்துவதற்கு குறைந்தது 50 ஏக்கர் நிலமாவது இருந்திருக்க வேண்டும். ஆனால் கலைஞரிடம் இருந்தது வெறும் பதினைந்து ஏக்கர்தான். நாங்கள் அதை அப்போதே அம்பலப்படுத்தினோம்.

### திருமதி.இந்திராகாந்தி மன்னிப்பு கேட்டார்!

இப்போது நான் பேசுவதைப் போல, சர்க்காரியா கமிஷன் எத்தகைய சூழ்நிலையில் நடைபெற்றது என்பதை அவர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும் - அவசர நிலை பிரகடனத்தின் போது தான் அது நடந்தது. ஆனால், இன்றிருக்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அன்றைக்கு இல்லை. சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டபோது பேச்சுரிமை இல்லை. பத்திரிகை சுதந்திரமும் இல்லை. பத்திரிகையாளர்களைச் சந்திக்க முடியாது. எந்தவொரு செய்தியும் பத்திரிகைகளில் வராது. மறுப்புகளும் வெளியிடப்படாது. அந்தக் காலக்கட்டத்தில் இந்த ஆணையத்தை அமைத்த இந்திரா காந்தி கூட, 1980 இல் கடற்கரைக்கு வந்து, அவசர நிலையின் போது தனக்கு தெரியாமல் சில தவறுகள் நடந்துவிட்டதாகக் கூறி கலைஞருக்கு முன்னால் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டார். இது பத்திரிகை உலகத்திற்கும், அரசியலை அறிந்தவர்களுக்கும், மூத்த அரசியல்வாதிகளுக்கும் தெரிந்த ஒன்றாகும். நேற்று பெய்த மழையில் முளைத்த காளான்களுக்கு, அரசியல் விவரமற்றவர்களுக்கு இது தெரியாது.

தமிழ்நாடு முதலமைச்சரிடம் நான் ஒரே ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அவருக்கு உண்மையில் தெம்பும் திராணியும் இருந்தால், அவர் வார்த்தைகளில் ஏதேனும் உண்மை இருந்தால், எங்களுடன் சர்க்காரியா கமிஷன் குறித்து விவாதிக்கத் தயாரா? வார்த்தைக்கு வார்த்தை விவாதிக்க நாங்கள் விவாதிக்க தயார், அவர் தயாரா? உதாரணமாக, புகார் கொடுத்த எம். ஜி. ஆர் தான் அடுத்த 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். ஆனால் எந்த வழக்கும் போட முடியவில்லை .

1977 இல், அவசர நிலையின் போது இந்திரா காந்தி தி.மு.க, ஜனதா கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் திராவிடக் கழகத்தைச் சேர்ந்த பலரைச் சிறையில் அடைத்திருந்ததால், அக்டோபர் 30 அன்று அவர் சென்னைக்கு வந்தபோது கருப்புக்கொடி காட்டக் கலைஞர் முடிவு செய்தார்; நாங்கள் கைது செய்யப்பட்டோம், மர்மலாங் பாலத்தின் அருகே ஆசிரியர் கி.வீரமணி மற்றும் அன்னை மணியம்மையார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கலைஞருடன் நாங்களும் கைது செய்யப்பட்டு 45 நாட்கள் சிறையில் இருந்தோம்.

இந்த விவரங்களையெல்லாம், முதலமைச்சர் விஜய் தனக்கு எழுதி கொடுத்த ஸ்கிரிப்ட் எழுதி கொடுத்தவரிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். கலைஞர் அல்லது திமுக ஏதேனும் தவறு செய்திருந்தால் எம்.ஜி.ஆரின் 10 ஆண்டு கால ஆட்சியில் எங்கள் மீது வழக்குத் தொடர்ந்திருக்கலாம்; ஆனால், எம்.ஜி.ஆர். அரசு அத்தகைய எந்த வழக்கையும் தொடரவில்லையே ஏன்.?

நாங்கள் அக்டோபர் 1977இல் இந்திரா காந்திக்குக் கருப்புக்கொடி காட்டினோம். அதனால் அந்த வழக்கு பதியப்பட்டு கலைஞருடன் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டோம். இந்த வழக்குடன் அது முடிவடைந்தது. 1981 இல் தீர்ப்பு வந்தது, நாங்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டோம்.

நான் எம்.ஜி.ஆரின் மனநிலையைப் பற்றிப் பேசுகிறேன்; இந்த வழக்கில் எப்படியாவது எங்களை உள்ளே வைக்க வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். உயர் நீதிமன்றத்தில் நாங்கள் விடுதலை செய்யப்பட்ட பிறகு, அவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்றார். ஆக, 1977 இல் நாங்கள் காட்டிய கருப்புக்கொடி தொடர்பான வழக்கு பிப்ரவரி 1996 இல்தான் வழக்கு முடிந்தது. இந்த ஒரு உதாரணம் போதாதா? முழு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

### முதலமைச்சர் விஜய் ரசிகர்களுக்காக பேசியுள்ளார்!

ஒருவருக்கு புத்தி கூர்மையும் அரசியல் தெளிவும் இருந்தால் அல்லது ஸ்கிரிப்ட் எழுதியவருக்காவது கடந்த கால வரலாறு பற்றி கொஞ்சமாவது அறிவு இருக்க வேண்டும். இந்தக் கோப்புகளைத் திறந்து பார்க்க வேண்டும். முதலமைச்சர் விஜய் தனது ரசிகர்களுக்காக பேசி உள்ளார் அவ்வளவே. தமிழ் நாட்டின் தரம், மாண்பு, பாரம்பரியம் மற்றும் சட்டமன்ற மரபுகள் அனைத்தும் இன்று மாண்புமிக்க தமிழ்நாடு சட்டப்பேரவையில் மீறப்பட்டுள்ளது.

சாதாரண ஒரு கருப்புக் கொடிப் போராட்ட வழக்கிற்காகவே அன்றைய அரசாங்கம் உச்ச நீதிமன்றம் வரை சென்றபோது, கலைஞர் அல்லது மற்றவர்கள் உண்மையில் ஏதாவது தவறு செய்திருந்தால் அவர்கள் விட்டிருப்பார்களா? அவருக்கு இந்த அடிப்படை சைக்காலஜிகூட இல்லையா? இதை தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமலேயே விஜய் பேசுகிறார்.

இன்னொரு விஷயத்தைக் கேட்கிறேன்; இந்த அனைத்துப் புகார்களும் அளிக்கப்பட்டபோது அவர் பிறக்கவே இல்லை. இது 1972 இல் அளிக்கப்பட்ட ஒரு புகார். அதன் பிறகுதானே உங்கள் தந்தை, கலைஞரால் எழுதப்பட்ட வசனத்தின் அடிப்படையில் ஒரு திரைப்படத்தை இயக்கச் சென்றார்? இல்லை, இல்லை, ஊழல்வாதி எழுதிய நாடகத்தைத் தொடமாட்டேன் என்று கூறி உங்கள் தந்தை மறுக்கவில்லை? போய் உங்கள் தந்தைட்டைக் கேளுங்கள். இன்று அவரது ஆட்சியில் நடக்கும் ஊழல் மட்டுமல்ல; இன்று காலையில் அமைச்சர் ஜெகதீஸ்வரி அவருடைய காரால் இடிக்கபட்டு ஒருவர் கொல்லப்பட்டார். நேற்றுதான் ஆளும் த.வெ.க.கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் நடு ரோட்டில் ஓட ஓட வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார். சட்டமன்றத்தில் இதையெல்லாம் பேச வேண்டிய நேரம் இது. காரணம், மூன்று நாட்களுக்குப் பிறகு சட்டமன்றம் கூடுகிறது. இதைக் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்—ஒரு கொலை நடந்துள்ளது, உங்கள் சொந்தக் கட்சியின் உறுப்பினர் ஒருவரின் பயங்கரமான கொலை செய்யப்பட்டுள்ளார். அதுமட்டுமின்றி, உங்கள் அமைச்சருக்குச் சொந்தமான கார் ஏற்படுத்திய விபத்தில் ஒருவர் இறந்துள்ளார். இன்றைய சட்டமன்றத்தில் எழுப்பப்பட வேண்டிய பிரச்சினைகள் இவைதான். ஆனால், முதலமைச்சர் விஜய் அவர்கள் இப்பிரச்சினைகளை திசைதிருப்பும் வேலையைச் செய்கிறார்; இதுவொரு “திசைதிருப்பல்” தந்திரமாகும், இதனால், மக்கள் பேசப்போவதெல்லாம் விஜய்யின் சட்டமன்றப் பேச்சை பற்றி மட்டும்தான். தொலைக்காட்சியில், சமூகவலைதளங்களில் பார்ப்பவர்களுக்கு த.வெ.க. உறுப்பினர் கொலை மற்றும் அமைச்சரின் காரால் ஏற்பட்ட உயிரிழப்பு பற்றிய பெரிய செய்திகள் எதுவும் வெளிவராது.

1989 சட்டமன்ற நிகழ்வு குறித்தும் ஜெயலலிதா குறித்தும் விஜய் பேசுகிறார். அதைப் பற்றிப் பேசு அவருக்கு எந்த யோக்கியதையும் இல்லை. ஏனெனில், அந்நிகழ்வு நடக்கும்போது ஜெயலலிதாஉடனிருந்ததிருநாவுக்கரசு அன்று சட்டமன்றத்தில் என்ன நடந்தது என்பதைப் பலமுறை பத்திரிகைகளுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆக திசை திருப்புகிற அரசியல் செய்கிறார் விஜய்.

எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதில் இல்லை

ஆணித்தரமாக எதிர்க்கட்சித் த்லைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் சொல்வதற்கு தெம்பில்லாமல் திராணி இல்லாமல் இன்றைக்கு ஒரு கபட நாடகத்தையும் - திசைதிருப்பும் முயற்சியையும் சட்டசபையிலே அரங்கேற்றிவிட்டு ஓடியிருக்கிறார் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் விஜய்.

மூத்த தலைவர் பேச்சை முதல்வர் விஜய் குறிப்பட்டது பற்றி. .

மேடையில் பேசும்போது எமோஷனலா பேசுவது இயற்கை. அதுக்கெல்லாம் உள்நோக்கம் கிடையாது.

இறுதியாக, முதலமைச்சர் விஜய் அவர்களுக்கு சொல்லிக் கொள்வது, இவரை விட ஜாம்பவான்லாம் 75 ஆண்டுகளாக பார்த்து வளர்ந்த கட்சி இந்த தி.மு.க. நேருவையே நாங்க பார்த்தவங்க. பண்டிதர் நேரு திமுகவை ஒழிப்பதற்காகவே சட்டத்தையே திருத்தினார் தெரியுமா? விஜய்க்கு இந்த வரலாறு தெரியுமா? அறிஞர் அண்ணா திராவிட நாடு கேட்டபோது , திமுகவை தடை செய்யணும்ன்றதுக்காகவே நேஷனல் இன்டகிரேஷன் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை ஒன்றை சிபி ராமசாமி ஐயர் தலைமையில போட்டு திமுகவை தடை செய்ய முயற்சி செஞ்சாங்க. அதுக்கு பிறகுதான் இந்த கட்சி வளர்ந்து ஆறு முறை ஆட்சியை பிடித்தது. பல பிரதமர்களை உருவாக்கிய பல ஜனாதிபதிகள் உருவாக்கிய கட்சி இது.

### எமர்ஜென்சியில் பெருந்தலைவர் காமராஜரை கைது செய்ய மறுத்தவர் கலைஞர்!

யாரோ ஸ்கிரிப்ட் எழுதி கொடுத்தாங்கன்னு, அத வச்சு பேசுறார் விஜய். ஆனால் அதற்கு பிறகு என்னென்ன நடந்தது? சர்க்காரியா கமிஷன் மூணு வருஷம் பிறகுதான் போட்டாங்க. போட்டதுக்கு காரணம் என்ன.? எமர்ஜென்சி வந்தது. இன்ன வெளிப்படையா சொல்லணும்னா எங்க மேல கேஸ் போட்டதுக்கு காரணம், பழைய காங்கிரசினுடைய எல்லா மூத்த தலைவர்கள் அனைவரையும் இந்திரா காந்தி அம்மா அரெஸ்ட் பண்ணிட்டாங்க. தமிழ்நாட்டுல காமராஜர் மட்டும்தான் அரெஸ்ட் ஆகல. அந்த பழைய காங்கிரஸ் தலைவர்ல காமராஜரையும் அரெஸ்ட் பண்ணனும்னு சொன்ன காரணத்தினால் தான் கலைஞர் நேரடியா காமராஜர் வீட்டுக்கு போய் காமராஜரை சந்தித்து ராஜினாமா கடிதத்தை கொடுக்கப் போறதா சொன்னார். “நான் ஆட்சியில் இருக்கிற போது எமர்ஜென்சி வராம தடுக்கவும் உங்கள கைது செய்துவிட்டு, நான் தொடர்ந்து ஆட்சியில் இருக்க விரும்பலன்னு சொல்லி, அதனால முதலமைச்சர் பதவியை ராஜினாமா பண்றேன்”னு கலைஞர், காமராஜர் கிட்ட சொன்ன போது காமராஜர் சொன்னாரு “நீ இருக்கறதுனாலதான் நான் வெளியில இருக்கேன், நீயே ராஜினாமா பண்ணிட்டா நாளைக்கே என்ன அரெஸ்ட் பண்ணிருவாங்க” என்றார். இது போன்ற தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றை எல்லாம் முதலமைச்சர் தெரிஞ்சுட்டு பேசணும். சும்மா யாரோ ஸ்கிரிப்ட் எழுதி கொடுத்ததை வச்சு பேசக்கூடாது.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.







## பேரா.சபாபதி மோகன் – உடுமலை ஜெயக்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை!



*ஈரோடு, செப். 9 -*

*ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழகத் தலைவர் தளபதி அவர்களின் உத்தரவின் படி, கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை ( 10.09.2026- வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயம், தளபதி மன்றத்தில் மாவட்ட அவைத்தலைவர் கே.குமார் முருகேஷ் தலையில் தலைமைக்கழக பிரதிநிதிகள் சபாபதி மோகன், உடுமலை ஜெயக்குமார் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.*

*அதுசமயம் இக்கூட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்டம் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் காலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்*

*பொருள்:*

*1. 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து.*

*2. கழக ஆக்கப்பணிகள் குறித்து.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை விடுத்துள்ளார்.*